بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 24/02/2023 அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**கலப்பற்ற தன்மை மற்றும் நன்றி உணர்வின் மொத்த உருவமாகத் திகழ்ந்த சில பத்ர் சஹாபிகளின் அருளுக்குரிய வாழ்க்கை வரலாற்றைப் பற்றிய குறிப்பும் எதிர்ப்பான சூழல்களை கவனத்தில் கொண்டு பாகிஸ்தான், புர்கினாபாஸோ மற்றும் அல்ஜீரியா ஆகிய நாடுகளில் வசிக்கும் அஹ்மதி மக்களுக்காக துஆ மற்றும் சதக்கா செய்வது சம்பந்தமான புதிய அறிவிப்பு**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

பத்ரி ஸஹாபிகளில் எவர்களின் நற்குறிப்புகள் முன்பு பேசப்பட்டு இருந்தனவோ அவர்களைப் பற்றிய சில விஷயங்கள் விடுபட்டிருந்தன. அதை நான் கூறிக் கொண்டிருந்தேன். இந்த விதத்தில் இன்றும் கூறுவேன். இதற்குப் பிறகு பத்ரி ஸஹாபிகள் தொடர்பாக நான் கூற நினைத்த இந்தத் தொடர் முழுமை அடைந்து விடும்.

**ஹஸ்ரத் ஆமிர் பின் ரபீஆ (ரலி) அவர்கள் தொடர்பாக எழுதப்பட்டுள்ளதாவது,** அன்னாருடைய தந்தையின் பெயர் ரபீஆ பின் கஅப் பின் மாலிக் பின் ரபீஆ ஆகும். அன்னாரிடமிருந்து சில அறிவிப்புகளும் கிடைக்கின்றன. அப்துல்லாஹ் பின் ஆமிர் ரபீஆ (ரலி) அவர்கள் தம்முடைய தாயார் ஹஸ்ரத் உம்மே அப்துல்லாஹ் லைலா பின்த் அபூ ஹஸ்மா (ரலி) அவர்களிடமிருந்து அறிவிப்பு செய்கிறார்கள். அதாவது, அவர்கள் கூறுகிறார்கள்:

நாங்கள் எத்தியோப்பியாவிற்கு பயணம் செல்லவிருந்தோம். ஆமிர் பின் ரபீஆ (ரலி) அவர்கள் ஏதோ ஒரு வேலை தொடர்பாக எங்கோ சென்றிருந்தார்கள். அப்பொழுது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இணைவைப்பில் இருந்த காலமாகும். அவர்கள் அங்கு வந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எங்களிடம், ‘பயணமா என்ன?’ என்று வினவினார்கள். நான் கூறினேன்: ‘ஆமாம். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நாங்கள் அல்லாஹ்வின் பூமியில் செல்கின்றோம். எது வரை என்றால், அல்லாஹ் எங்களுக்கு செழிப்பை வழங்குவானாக. நீங்கள் எங்களுக்கு மிகவும் கஷ்டத்தைத் தந்துள்ளீர்கள். எங்கள் மீது மிக அதிக கடுமையை காண்பித்துள்ளீர்கள்.’

அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ‘அல்லாஹ் உங்களுடைய பாதுகாவலனாக இருப்பானாக.’ அவர்கள் கூறுகின்றார்கள்: ‘நான்

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் குரலில் அன்று பார்த்தது போன்ற உருக்கத்தை அதற்கு முன்பு பார்த்தது இல்லை. நாங்கள் அங்கிருந்து வெளியேறுவது அவர்களுக்கு துக்கத்தைத் தந்தது. ஹஸ்ரத் ஆமீர் (ரலி) அவர்கள் திரும்பி வந்து விட்டார்கள். அப்பொழுது அவரிடம், 'நீங்கள் தற்பொழுது உமர் (ரலி) அவர்கள் மற்றும் அவருடைய கலக்கத்தைப் பார்த்தீர்களா?' என்றேன். அதற்கு ஹஸ்ரத் ஆமீர் (ரலி) அவர்கள் கேட்டார்கள்: 'நீங்கள் அவர் முஸ்லிம் ஆவதை விரும்புகிறீர்களா?' பிறகு அவர்கள் கூறினார்கள்: 'கத்தாபின் கழுதை முஸ்லிம் ஆகலாம். ஆனால், அவர் முஸ்லிம் ஆக மாட்டார்.' ஹஸ்ரத் லைலா கூறுகின்றார்கள்: இந்த விஷயம், ஹஸ்ரத் ஆமிர் (ரலி) அவர்கள் நம்பிக்கை இழந்ததன் காரணத்தினால் கூறியதாகும். அது அவர்களிடம், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்திற்கு எதிர்ப்பு மற்றும் கடினம் காட்டியதன் காரணத்தினால் உருவானதாகும்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஆமிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அதாவது, அவர்களுடைய தந்தை ஹஸ்ரத் அமீர் பின் ரபீஆ (ரலி) அவர்கள் கூறினார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் எங்களை ஏதாவது ஒரு படையுடன் அனுப்பும் பொழுது, எங்களிடம் பயணப் பொருளாகப் பேரித்தம் பழத்தின் ஒரு பை மட்டுமே இருக்கும். படைத் தளபதி எங்களுக்குக் கையளவு பேரித்தம் பழத்தை விநியோகம் செய்து விடுவார்கள். சிறிது சிறிதாக அது முடிந்து விடும். அப்பொழுது ஒரு பேரித்தம் பழம் ஒரு நபருக்குக் கிடைக்கும்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் கூறுகின்றார்கள்: நான் எனது தந்தையிடம் கேட்டேன். ஒரு பேரிச்சம் பழம் எவ்வாறு போதுமானதாக இருக்கும்? அதற்கு அவர்கள் கூறினார்கள்: 'இவ்வாறு ஒருபோதும் கூறாதே! ஏனென்றால், அது கூட எங்களிடம் இல்லாமல் இருந்த அந்தத் தருணத்தில்தான் அதனுடைய மகத்துவம் நமக்குப் புரியும்.'

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தம்முடைய கிலாஃபத் காலகட்டத்தில், கைபர் பகுதியிலிருந்து யூதர்களை வெளியேற்றி விட்டார்கள். அப்பொழுது குறா பள்ளத்தாக்கின் நிலங்கள் எவர்களுக்கெல்லாம் அன்னார் பிரித்து வழங்கினார்களோ அவர்களில் ஹஸ்ரத் ஆமிர் பின் ரபீஆ (ரலி) அவர்களும் அடங்குவார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஜாபியாவுக்கு சென்ற பொழுது, ஹஸ்ரத் ஆமிர் (ரலி) அவர்கள் அன்னாருடன் இருந்தார்கள். ஓர் அறிவிப்பின் அடிப்படையில், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கொடி ஹஸ்ரத் ஆமீர் (ரலி) அவர்களிடம் இருந்தது. ஹஸ்ரத் ஆமிர் பின் ரபீஆ (ரலி) அவர்களுடைய வஃபாத் தொடர்பாக கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. இருப்பினும், அல்லாமா இப்னு அஸாக்கிர் அவர்களின் கருத்துப்படி, 32 ஹிஜ்ரீ என்கிற அறிவிப்பு மிக சரியானது என்று தெரிகிறது. அன்னார் வஃபாத் தொடர்பாக அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ளதாவது, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஷஹாதத்திற்குப் பிறகு, அன்னார் தம்முடைய வீட்டிலேயே தங்கி இருந்தார்கள். எதுவரை என்றால், அன்னாருடைய ஜனாஸா வீட்டில் இருந்து கொண்டு செல்லப்பட்டது.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஆமிர் (ரலி) அவர்கள் தமது தந்தையிடமிருந்து அறிவிப்பு செய்கிறார்கள்: ‘பெருமானார் (ஸல்) அவர்களின் காலத்தில் ஒரு நபர் பனூ ஃபஸாராவின் ஒரு பெண்ணை இரண்டு காலணிகள் மஹர் நிர்ணயம் செய்து நிக்காஹ் செய்து கொண்டார். பெருமானார் (ஸல்) அவர்கள் அவருடைய நிக்காஹ்வை ஆகுமானது என்று அங்கீகாரம் வழங்கினார்கள்.

அன்னார் தமது தந்தையிடமிருந்தே மேலும் ஓர் அறிவிப்பை செய்கின்றார்கள். **பெருமானார் (ஸல்) அவர்கள் பயணத்தின் பொழுது தம்முடைய ஒட்டகத்தின் மேல் அமர்ந்தவாறு இரவில் நஃபில் தொழுததாக அவர்கள் கண்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் தம்முடைய ஒட்டகம் எந்தப் பக்கத்தைப் பார்த்தவாறு செல்கின்றதோ அந்தப் பக்கமே முகம் திருப்பி இருந்தார்கள்.**

ஹஸ்ரத் ஆமிர் பின் ரபீஆ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ‘நான் பெருமானார் (ஸல்) அவர்களுடன் ஒரு இரவில் பயணம் மேற்கொண்டேன். நாங்கள் ஓர் இடத்தில் இறங்கினோம். அப்பொழுது ஒரு நபர் கற்களை ஒன்று சேர்த்தார். மேலும், தொழுகைக்கான இடம் தயார் செய்தார். அங்கு தொழுதார். எங்களுடைய முகம் கிப்லா பக்கம் இல்லை என்பதை காலையில் அறிந்தோம். நாங்கள் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வினவினோம். அப்பொழுது அல்லாஹ் இந்த வசனத்தை இறக்கினான்:

وَلِلّٰهِ الْمَشْرِقُ وَالْمَغْرِبُ ۚ فَاَيْنَمَا تُوَلُّوْا فَثَمَّ وَجْهُ اللّٰهِ ؕ

‘‘கிழக்கும் மேற்கும் அல்லாஹ்வுக்கே உரியனவாகும். ஆகையால், நீங்கள் எந்தப் பக்கத்தில் முகம் திருப்புகின்றீர்களோ அங்கு அல்லாஹ்வைக் காண்பீர்கள்.’’ அதாவது, தவறாக புரிதலின் காரணத்தினால் இது நடந்தது என்றால் அதில் எந்தத் தவறும் இல்லை.

*பெருமானார் (ஸல்) அவர்கள் ஓதி காண்பித்தது, புரிய வைப்பதற்காக சொன்னதாக இருக்கலாம். (இவ்வசனம்) அந்தத் தருணத்தில் இறங்கியது என்பது கட்டாயம் இல்லை என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் விளக்கினார்கள்.*

ஹஸ்ரத் அமீர் பின் ரபிஆ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘என் மீது எவர் ஒரு முறை துரூது ஓதுவாரோ அல்லாஹ் அவர் மீது 10 முறை சமாதானத்தை அனுப்புகிறான். ஆகையால், என்மீது குறைவான துரூது ஓதுவதா அல்லது அதிகமான துரூது ஓதுவதா என்பது உங்களுடைய விருப்பமாகும்.’

ஓர் அறிவிப்பில் வந்துள்ளது, ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘எந்த அடியார் என் மீது சாந்திக்கான துஆ செய்கிறாரோ, மேலும், எப்பொழுது வரை அவர் இந்த நிலையில் இருக்கிறாரோ, வானவர்களும் அவருக்காக அமைதிக்கான துஆ செய்வார்கள். ஆகையால், அடியார் அதிகமான முறை சாந்தி சமாதானம் வேண்டி துஆ வேண்டுவதும் குறைவாக வேண்டுவதும் அவருடைய அதிகாரத்திற்குட்பட்டதாகும்.

**அடுத்த குறிப்பு, ஹஸ்ரத் ஹராம் பின் மல்ஹான் (ரலி) அவர்களுடையதாகும்.** ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூத் (ரலி) அவர்கள் சஹாபிகளின் தியாகத்தின் ஆர்வத்தை உதாரணமாக காண்பித்தவாறு கூறுகின்றார்கள்: நமக்கு வரலாறு படிக்கும் பொழுது தெரிய வருகின்றது, சஹாபிகள் போரில் எவ்வாறு சென்றார்கள் என்றால், போரில் ஷஹீது ஆவது அவர்களுக்கு நிம்மதி மற்றும் மகிழ்ச்சிக்குக் காரணமாக இருப்பதாகத் தெரிந்தது. ஆகையால் தான், வரலாற்றில் சஹாபிகளின் அதிகமான சம்பவங்கள் இவ்வாறானவை நமக்குக் கிடைக்கின்றன. அதாவது, அவர்கள் இறைவழியில் கொல்லப்படுவதையே தங்களுக்கு நிம்மதி என்று நினைத்தார்கள். உதாரணத்திற்கு அந்த ஹாஃபிஸ்கள். அவர்களை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அரேபியாவின் மத்திய பகுதியின் ஒரு கோத்திரத்திற்குத் தப்லீக் செய்வதற்காக அனுப்பினார்கள்.

அவர்களில், ஹராம் பின் மில்ஹான் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எடுத்துக் கொண்டு ஆமீர் கோத்திரத்தின் தலைவன் ஆமீர் பின் துஃபைலிடம் சென்றார்கள். மற்ற சஹாபிகள் பின்னால் இருந்தார்கள். ஆரம்பத்திலோ ஆமீர் பின் துஃபைல் மற்றும் அவனுடைய தோழர்கள் நயவஞ்சகமான முறையில் அவர்களை வரவேற்றனர். இருப்பினும், அவர்கள் அமைதியாக அமர்ந்த பிறகு, மேலும், தப்லீக் செய்ய ஆரம்பித்ததும், அவர்களில் சில விஷமிகள் ஒரு தீயவனுக்கு செய்கை செய்தனர். அவன் செய்கை கிடைத்ததும், ஹஸ்ரத் ஹராம் பின் மில்ஹான் (ரலி) அவர்கள் மீது, பின்னால் இருந்து அம்பினால் தாக்குதல் செய்தான். அன்னார் விழுந்துவிட்டார்கள். விழுந்தவுடனேயே அன்னாரின் நாவிலிருந்து தம்மை அறியாமல் வெளிப்பட்டது: اَللّٰهُ اَكْبَرُ۔ فُزْتُ وَرَبِّ الْكَعْبَةِ அதாவது, கஅபாவின் ரப்பின் மீது ஆணையாக! நான் வெற்றியடைந்தேன்.

பிறகு, இந்தத் தீயவர்கள் மற்ற சஹாபிகளைச் சுற்றி வளைத்தனர். மேலும், அவர்கள் மீது தாக்குதல் தொடுத்தனர். இந்தத் தருணத்தில், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களால் விடுதலை செய்யப்பட்டிருந்த அடிமை ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) அவர்கள் தொடர்பாக வருகின்றது. இன்னும் கூறுவதாயின், இவர்களை கொலை செய்த அந்தக் கொலையாளி, பிறகு முஸ்லிமாக மாறிவிட்டார். அவர் தாம் முஸ்லிமாக மாறியதன் காரணத்தை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்: நான் ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) அவர்களை ஷஹீதாக்கினேன். அப்பொழுது அவர்களுடைய நாவில் இருந்து இயல்பாக فُزْتُ وَاللّٰهِ வெளிப்பட்டது: அதாவது, இறைவன் மீது ஆணையாக! நான் என்னுடைய நோக்கத்தை அடைந்து விட்டேன்.

இந்த சம்பவங்கள் கூறுவது என்னவென்றால், மரணம் என்பது சஹாபிகளுக்கு துக்கத்திற்கு பகரமாக மகிழ்ச்சிக்குக் காரணமாக இருந்தது.

**அடுத்த குறிப்பு, ஹஸ்ரத் ஸஃத் பின் கவ்லா (ரலி) அவர்களுடையதாகும்.** ஆமிர் பின் ஸஃது (ரலி) அவர்கள் தம்முடைய தந்தை ஸஃது பின் வக்காஸ் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிப்பு செய்கின்றார்கள், அவர்கள் கூறினார்கள்:

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஜ்ஜத்துல் விதா சந்தர்ப்பத்தில் என்னை நலம் விசாரித்தார்கள். அந்த நோயால் நான் மரணத்தின் அருகில் சென்று விட்டிருந்தேன். நான் வினவினேன்: 'என்னுடைய கஷ்டம் எந்த எல்லைக்கு சென்று விட்டது என்பதைத் தாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். என்னுடைய வாரிசாக என்னுடைய ஒரு மகளைத் தவிர வேறு யாருமில்லை.' நான் கேட்டதற்கிணங்க பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மூன்றில் ஒரு பகுதி சதக்கா செய்து விடுங்கள். பிறகு கூறினார்கள்: வாரிசுகளை நல்ல நிலையில் விட்டுச் செல்லுங்கள். இது தேவையுடையவர்களாக விட்டுச் செல்வதை விடச் சிறந்ததாகும். நீங்கள் அல்லாஹ்வின் வழியில் எதை செலவு செய்தாலும் அதற்கான நற்கூலி உங்களுக்கு வழங்கப்படும். எதுவரை என்றால், உங்களுடைய மனைவியின் வாயில் இடும் ஒரு கவளம் உணவுக்கான நற்கூலியும் வழங்கப்படும். ஹஸ்ரத் ஸஃத் பின் கவ்லா (ரலி) அவர்கள் ஹிஜ்ரத் செய்த பிறகு மக்காவிலேயே மரணமடைந்து விட்டார்கள்.

**அடுத்த குறிப்பு, ஹஸ்ரத் அபுல் ஹைஸம் பினில் தைஹான் (ரலி) அவர்கள் பற்றியதாகும்.** அன்னார் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வினவினார்கள்: 'நான் முதன் முதலில் பெருமானார் (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்யப்போகிறேன். நாங்கள் எவ்வாறு தங்களிடம் பைஅத் செய்வது என்றேன்?' பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'இஸ்ரவேலர்கள் மூஸாவிடம் எந்த விஷயத்தில் பைஅத் செய்தார்களோ அதன் அடிப்படையில் என்னிடம் நீங்கள் பைஅத் செய்யுங்கள்.' அன்னார் (ரலி) போரின் பொழுது இரண்டு வாள்களை தொங்க விட்டுக் கொள்வார்கள். இதன் காரணத்தினால் அன்னார் (ரலி) 'ஸூஸ் ஸைஃபைன் - இரு வாள்கள் உடையவர்' என்றும் அழைக்கப்பட்டார்கள். இவர்கள் ஸிஃப்பீன் போரின் பொழுது ஷஹீத் ஆனார்கள்.

**பிறகு, ஹஸ்ரத் ஆஸிம் பின் ஸாபித் (ரலி) அவர்களுடைய குறிப்பு ஆகும்.** ஹஸ்ரத் இமாம் ராஸி அவர்கள் எழுதுகிறார்கள்: உஹது போரில் எந்த மக்கள் எல்லாம் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அருகில் இருந்தார்களோ, அவர்களில் ஹஸ்ரத் ஆஸிம் பின் ஸாபித் (ரலி) அவர்களும் அடங்குவார்கள்.

பிறகு, **அடுத்த குறிப்பு ஹஸ்ரத் ஸஹல் பின் ஹுனைஃப் அன்ஸாரி (ரலி) அவர்களுடையதாகும்.** உஹத் போரின் தருணத்தில் நபி (ஸல்) அவர்களுக்கு அருகில் இருந்த நபர்களில் ஹஸ்ரத் ஸஹல் பின் ஹுனைஃப் (ரலி) அவர்களுடைய குறிப்பும் கிடைக்கின்றது.

ஹஸ்ரத் உமைர் பின் ஸயீத் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அன்னாரின் ஜனாஸா தொழுகையில் ஐந்து தக்பீர்கள் கூறினார்கள். பொதுமக்கள் வியப்படைந்தனர். அப்பொழுது அன்னார் (ரலி) கூறினார்கள்: இவர் ஸஹல் ஹுனைஃப் ஆவார். பத்ர் தோழர் ஆவார். மேலும், பத்ர் தோழர்கள் மற்றவர்கள் மீது மகத்துவம் பெற்றவர்கள் ஆவார்கள். அவர்களுடைய மகத்துவத்தை உங்களுக்குத் தெரிவிக்க விரும்பினேன்.

**பிறகு, ஹஸ்ரத் ஜப்பார் பின் ஸஹர் (ரலி) அவர்களின் நற்குறிப்பு ஆகும்.** ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுடன் 150

நபர்களைக் கொண்ட படையை ‘பனூ தே’ யின் ‘ஃபுல்ஸ்’ சிலையை வீழ்த்த அனுப்பி வைத்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் கருப்பு நிறத்தில் ஒரு கொடியைத் தந்தார்கள். மேலும், வெள்ளை நிறத்தில் ஒரு சிறிய கொடியும் வழங்கினார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் காலை நேரத்தில் ஹாத்திம் வாசிகள் மீது தாக்குதல் தொடுத்தார்கள். மேலும், அவர்களுடைய ‘ஃபுல்ஸ்’ சிலையை அழித்து விட்டார்கள். இந்தப் போரில், கொடி ஹஸ்ரத் ஜப்பார் பின் ஸஹர் (ரலி) அவர்களிடம் இருந்தது.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* நான் கூற விரும்பியிருந்த, சஹாபிகள் பற்றிய இந்தக் குறிப்பு இங்கு நிறைவு பெற்றது.

இத்துடன் நான் பாகிஸ்தான் அஹ்மதிகளுக்காக துஆவுக்காக கூற விரும்புகின்றேன். துஆ செய்யுங்கள். அவர்கள் மீது இருக்கின்ற கடுமையான நிலைகளை அல்லாஹ் அங்கு எளிமையாக மாற்றுவானாக! நீதியை நிலைநாட்டுபவர்கள், சட்டத்தை இயற்றுபவர்கள், மேலும், அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் பெயரில் அநீதி இழைப்பவர்களுக்கு அல்லாஹ் அறிவை வழங்குவானாக அல்லது அவர்களைப் பிடிப்பதற்கான ஏற்பாட்டை செய்வானாக!

இரண்டாவதாக புர்க்கினா ஃபாஸோவுக்காகவும் துஆ செய்யுங்கள். அங்கும் இப்போது கடுமை நிலவுகிறது. இப்போதும் பயங்கரவாதிகள் மற்றும் கடுமையை விரும்புகின்றவர்களின் செயல் அவ்வாறே உள்ளது. அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் பெயரில் அநீதி இழைக்கின்றனர். பிறகு, அல்ஜீரியா மக்களுக்காகவும், அங்கும் சில அரசு அதிகாரிகள் அல்லது நீதிமன்றங்கள் தவறான விதத்தில் அஹ்மதிகள் மீது அநீதி இழைக்கின்றார்கள். அல்லாஹ் அனைவரையும் தனது பாதுகாப்பில் வைப்பானாக! குறிப்பாக துஆக்களின் மீதும் சதக்காகளின் மீதும் அதிக கவனமும் அழுத்தமும் தாருங்கள். அல்லாஹ் எதிரிகளின் தீங்கிலிருந்து ஒவ்வொருவரையும் பாதுகாப்பானாக!

*கடைசியில், ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அஹ்மதிகளின் எதிரிகளால் 19 பிப்ரவரி அன்று சுட்டு ஷஹீதாக்கப்பட்ட மதிப்பிற்குரிய சௌத்ரி பஷாரத் அஹ்மத் சாஹிப் அவர்களின் மகன்* ***மதிப்பிற்குரிய முஹம்மது ரஷீத் சாஹிப் ஷஹீத் அவர்கள்,*** *6 பிப்ரவரி 2023 அன்று துருக்கியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் மரணமடைந்த தாய் மற்றும் மகன்* ***மதிப்பிற்குரிய அம்மானீ பஸ்ஸாம் அஜ்லாவை சாஹிபா அவர்கள்*** *மற்றும்* ***சலாஹ் அப்துல் மொயீன் குதைஷ், இயக்கத்தின் முரப்பி மதிப்பிற்குரிய மக்ஸூத் அஹ்மத் முனீப் சாஹிப்*** *ஆகியோரின் நற்குறிப்பை எடுத்துரைத்தவாறு அவர்களின் ஜனாஸா காயிப் தொழ வைப்பதாக அறிவிப்பு செய்தார்கள். அல்லாஹ் அவர்களுடன் மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக! அவர்களின் தரஜாத்தை உயர்த்துவானாக!*

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّآ اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ اللّٰہَ یَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி M. ஷஹாபுதீன்)**